**செய்தி வெளியீடு எண்: 818** **நாள்: 08.11.2018**

தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையில், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் பல்வேறு கால்நடை நிலையங்களில் காலியாக உள்ள கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்களில் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக கால்நடை உதவி மருத்துவராக பணிபுரிய **8.10.2018** முதல் **13.10.2018** வரை சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் மதிப்பீட்டு பணி தகுதியுள்ள கால்நடை உதவி மருத்துவர்களுக்கு நடத்தப்பட்டது. இதில் தேர்ச்சி பெற்ற **818** நபர்களின் பதிவு எண் மற்றும் அவர்களுக்கான பணியிட விவரம் **www.tn.gov.in**. என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

தேர்ச்சி பெற்றவர்களுக்கான பணி நியமன ஆணை சம்மந்தப்பட்ட நபர்களுக்கு பதிவஞ்சல் / துரித அஞ்சல் மூலமாக உடன் அனுப்பி வைக்கப்படும். பணி நியமன ஆணை பெற்றவுடன் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக கால்நடை உதவி மருத்துவர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள், சம்மந்தப்பட்ட மண்டல இணை இயக்குநரை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்,
கால்நடை பராமரிப்பு மற்றும்
மருத்துவப் பணிகள், சென்னை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**